பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

05 07 2025 **SATURDAY** **6.30 PM**

மாநிலச் செய்திகள்
தலைப்புச் செய்திகள்

1. அர்ஜென்டினா சென்றுள்ள பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று, அந்நாட்டு அதிபர் **Javier Milei**-ஐ சந்தித்து, இருதரப்பு ஒத்துழைப்பு உள்ளிட்ட முக்கிய விஷயங்கள் குறித்து பேச்சு நடத்தவுள்ளார்.

2. ஆயுஷ்மான் பாரத் திட்டம் ஏழை-எளிய மக்களுக்கு அதிக அளவில் மருத்துவ வசதிகளை வழங்கி வருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

3. தமிழகத்தில் அரசின் திட்டங்கள் குறித்த குறை கேட்பு முகாம்கள் இம்மாதம் 15-ஆம் தேதிமுதல், நவம்பர் இறுதிவரை அனைத்து மாவட்டங்களிலும் நடைபெறும் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

4. திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் கும்பாபிஷேகத்தையொட்டி, அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

5. ஆசிய ஜூனியர் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியா இரண்டு தங்கம், இரண்டு வெள்ளிப்பதக்கங்களை வென்றுள்ளது.

*-- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<>>>>>

அர்ஜென்டினா சென்றுள்ள பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று, அந்நாட்டு அதிபர் திரு **Javier Milei**-ஐ சந்தித்து, இருதரப்பு ஒத்துழைப்பு உள்ளிட்ட முக்கிய விஷயங்கள் குறித்து பேச்சு நடத்தவுள்ளார்.

கடந்த 2018-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பிரேசிலின் ரியோடி ஜெனிரோவில் நடைபெற்ற ஜி-20 உச்சிமாநாட்டின்போது இருநாட்டுத் தலைவர்களும் பரஸ்பர ஒத்துழைப்பு மற்றும் வர்த்தக பொருளாதார உறவுகள் குறித்தும், பாதுகாப்பு குறித்தும் பேச்சுக்கள் நடத்தினர்.

உலகின் தென்பகுதி நாடுகளுடன் இந்தியாவுடனான உறவை வலுப்படுத்துவதன் நோக்கமாக ஐந்து நாடுகள் பயணத்தை மேற்கொண்டுள்ள பிரதமர் திரு நரேந்திர மோடி, தமது பயணத்தை தொடங்கும்முன் வெளியிட்டுள்ள அறிக்கையில், லத்தீன் அமெரிக்க நாடான அர்ஜென்டினாவுடனான பொருளாதார ஒத்துழைப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று குறிப்பிட்டிருந்தார்.

<<<<<<>>>>>

**BIS** தர நிர்ணயத்துடன் கூடிய ஹெல்மட்டுகளையே இருசக்கர வாகன ஓட்டிகள் பயன்படுத்துமாறு மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை கேட்டுக்கொண்டுள்ளது.

இதுதொடர்பாக, இந்த துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், '**BIS** தர நிர்ணயம் இல்லாத ஹெல்மட்டுகளின் உற்பத்தி மற்றும் விற்பனையை தடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

கடந்த நிதியாண்டில் 30-க்கும் மேற்பட்ட சோதனைகள் நடத்தப்பட்டு, '**BIS** தர நிர்ணயத்தை தவறாக பயன்படுத்திய நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தில்லியில் மட்டும் ஆயிரத்து 500-க்கும் மேற்பட்ட தர நிர்ணயம் செய்யப்படாத ஹெல்மட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டு, ஒன்பது நிறுவனங்களின் உரிமங்கள் ரத்து செய்யப்பட்டதாகவும் நுகர்வோர் விவகாரங்கள் துறை தெரிவித்துள்ளது.

**<<<<<<>>>>>**

ஆயுஷ்மான் பாரத் திட்டம் ஏழை-எளிய மக்களுக்கு அதிக அளவில் மருத்துவ வசதிகளை வழங்கி வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

திருவனந்தரபுத்தில் இன்று தனியார் மருத்துவக்கல்லூரி பட்டமளிப்பு விழாவை தொடங்கிவைத்து பேசிய இணையமைச்சர், கடந்த பத்தாண்டுகளில் நாட்டில் உள்ள மருத்துவ கல்லூரிகளின் எண்ணிக்கை 387-ல் இருந்து 776-ஆக உயர்ந்துள்ளது என்று கூறினார்.

நாட்டில் சர்வதேச தரத்திற்கு இணையான மருத்துவ சேவை வழங்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் நாளை சென்னையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கிறார்.

**<<<<<<>>>>>**

மூத்த தமிழறிஞர் பெருங்கவிக்கோ வா. மு. சேதுராமன் மறைவுக்கு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

திரு மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், தம்முடைய வாழ்நாள் முழுவதும் தமிழுக்காகவே தம்மை அர்ப்பணித்தவர் பெருங்கவிகோ என்று குறிப்பிட்டுள்ளார்.

அவரது ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட கவிதைகள் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட கவிதை நூல்கள் என்றென்றும் போற்றப்படும் என்றும் திரு ஸ்டாலின் கூறியுள்ளார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச்செயலாளர் திரு இரா. முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், தமிழ் இலக்கியங்களை உள்வாங்கி வெளிப்படுத்தும் இவரது படைப்புகள் என்றென்றும் நிலைத்துநிற்கும் என்று கூறியுள்ளார்.

மதிமுக பொதுச்செயலாளர் திரு வைகோ, பாமக தலைவர் திரு அன்புமணி ராமதாஸ், உள்ளிட்ட தலைவர்களும் பெருங்கவிக்கோ வா மு சேதுராமன் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளனர்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் அனைத்து நகர்ப்புற, ஊரகப்பகுதிகளில் மாநில அரசின் திட்டங்கள் குறித்து மக்களிடம் நேரடியாக குறைகளை கேட்டறியும் முகாம்கள் இம்மாதம் 15-ஆம் தேதிமுதல், நவம்பர் மாத இறுதிவரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசுத்துறைகளின் திட்டங்கள் கடைக்கோடி மக்களுக்கும் சென்றடையும் நோக்கில், 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட முகாம்கள் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகர்ப்புறங்களில் 3 ஆயிரத்து 768 முகாம்களும், ஊரகப்பகுதிகளில் 6 ஆயிரத்து 32 முகாம்களும் நடைபெறுகின்றன.

முகாம்களுக்கு வரும் மக்களின் உடல்நலனை பேணும் வகையில் மருத்துவ முகாம்களுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக இன்று வெளியான மாநில அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் கும்பாபிஷேகம் வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ளதையொட்டி, பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக தூத்துக்குடி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு ஆல்பர்ட் ஜான் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களிலிருந்து திருச்செந்தூருக்கு வரும் சரக்கு வாகனங்கள் மற்றும் கனரக வாகனங்களுக்கு தடை விதிக்கப்படடுள்ளதாகவும் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

தமிழகம் மற்றும் புதுவையில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்திப்பிரிவுக்கு அவர் அளித்த பேட்டியில், நீலகிரி மற்றும் கோவை மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் கூறினார்.

<<<<<<>>>>>

காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்துவரும் தொடர்மழை காரணமாக, நீர்வரத்து அதிகரித்து ஒகேனக்கல் காவிரி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக, ஒகேனக்கல்லுக்கு சுற்றுலாப்பயணிகள் செல்வதற்கு 11-ஆவது நாளாக தடை விதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

நெல்லையில் நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமில் தேர்வானவர்களுக்கு பணி நியமன ஆணைகளை மாநில அமைச்சர்கள் திரு கே என் நேரு, திரு கோவி செழியன் ஆகியோர் இன்று வழங்கினர்.

------------------

திருப்பத்தூர் மாவட்டத்தில் நடைபெற்ற தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் தேர்வானவர்களுக்கு பணிநியமன ஆணைகளை ஆட்சியர் திருமதி சிவசௌந்தரவல்லி வழங்கினார்.

-----------------

காஞ்சிபுரத்தில் சாலை பாதுகாப்பு மற்றும் போதைப்பொருள் விழிப்புணர்வு பேரணியை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு சண்முகம் இன்று தொடங்கிவைத்தார்.

-------------------

செங்கல்பட்டு அருகே 2 கோடி ரூபாய் மதிப்பிலான யானை தந்தத்தை விற்பனை செய்ய முயன்ற பெண் உட்பட 8 பேரை வனத்துறையினர் கைது செய்தனர்.

--------

பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மற்றும் இணையதள குற்றங்கள் குறித்து சென்னை தேனாம்பேட்டையில் காவல்துறை சார்பில், விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

--------------------

வேலூர் மாவட்டம் குடியாத்தத்தில் உலக அமைதி மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

-------------------

திருச்சி மாவட்டம் துறையூர் அருகே வாகன சோதனையின் போது காரில் கடத்திவரப்பட்ட 2 லட்சம் ரூபாய் மதிப்பிலான போதைப்பொருட்களை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.

-----------------

ராணிப்பேட்டை மாவட்டம் யோக ஆஞ்சநேயர் கோவில் குடமுழுக்கையொட்டி, சோளிங்கர் வட்டத்துக்கு உட்பட்ட பள்ளிகளுக்கு நாளை மறுநாள் உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<<>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய ஜூனியர் ஸ்குவாஷ் போட்டியில இந்தியா இரண்டு தங்கம், இரண்டு வெள்ளிப்பதக்கங்களை வென்றுள்ளது.

தென்கொரியாவில் நடைபெற்ற இப்போட்டியின் 19 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் பிரிவில் அனாகத் சிங்கும், 17 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆடவர் பிரிவில் **Aryaveer Dewan**-னும் தங்கப்பதக்கம் வென்றனர்.

15 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் பிரிவில் **Sanvi Kalanki** -ம், 13 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆடவர் பிரிவில் **Ayaan Dhanuka**-வும் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

-------------

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் நான்காவது நாளான இன்று இந்தியா தனது இரண்டாவது இன்னிங்சில் சற்றுமுன்வரை 3 விக்கெட் இழப்பிற்கு 205 ரன் எடுத்துள்ளது.

பர்மிங்ஹாமில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் இங்கிலாந்து முதல் இன்னிங்சில் 407 ரன் எடுத்துள்ளது.

இந்தியா முதல் இன்னிங்சில் 587 ரன் எடுத்துள்ளது.

**<<<<<<END>>>>>**